வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC. 61/ 2021 |
| வழக்கு சாட்சி | : | Pw3 |
| நாள் | : | 23.01.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | துரைராஜ் | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை** : நான் ஏற்கனவே அழைத்து முதல் விசாரணை சாட்சியம் ஞாபகத்தில் உள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் போலீசார் விசாரணையின் போதும் புகார் கொடுக்கும் போதும் சொன்னேன் என்றால் சரிதான். புகார் கொடுக்கும் போது நான் போகவில்லை. சம்பவத்தை பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது. நான் எந்த இடத்தில் சகோதரரை ஏற்றி வந்த ஆட்டோவை நிறுத்தி ஏறிக்கொண்டேன் என்ற விவரத்தை நான் போலீசார் விசாரணையில் கூறவில்லை. எனது கடை திருவள்ளூர் மெயின் ரோட்டில் உள்ளது. எனது அண்ணன் தலையில் அடிப்பட்டு மிகவும் மயக்கமான நிலையில் இருந்தார் என்றால் சரிதான். காலில் அடிப்பட்ட விவரத்தை கூட சொல்லமுடியாமல் சைகைகளால் தான் சொன்னார் என்றால் சரிதான். என்னிடடோ அசா1, அசா2 யிடம் இறந்த போன நபர் எதுவும் பேசவில்லை சொல்லவில்லை என்றால் சரிதான். தனது தந்தை எதுவும் சொன்னதாக அசா1 என்னிடம் சொல்லவில்லை. மறுநாள் தான் புகார் கொடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. அசா2 ஐசக்கின் தந்தை தாக்கப்பட்டு வழக்கு ஏற்பட்டது தொடர்பாக விரோதம் கொண்டு ஐசக் மற்றும் அவரை சார்ந்தவர்கள் தான் சம்பவத்தில் ஈடுபட்டிருக்கலாம் என சந்தேகப்பட்டு அவர்கள் மீது புகார் அளித்தாக சொல்லியுள்ள விவரம் சரிதான்.

Sd/. M.A. Kabeer
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம்
திருவள்ளூர்,

வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC. 61/ 2021 |
| வழக்கு சாட்சி | : | Pw2 |
| நாள் | : | 23.01.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரசிகாமணி | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | தங்கசாமி நாடார் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை** : நான் ஏற்கனவே அழைத்து முதல் விசாரணை சாட்சியம் ஞாபகத்தில் உள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் போலீசார் விசாரணையின் போதும் புகார் கொடுக்கும் போதும் சொன்னேன் என்றால் சரிதான்.

Sd/. M.A. Kabeer

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம்

திருவள்ளூர்,

வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC. 61/ 2021 |
| வழக்கு சாட்சி | : | Pw1 |
| நாள் | : | 23.01.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | தங்கசாமி நாடார் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை** : நான் ஏற்கனவே அழைத்து முதல் விசாரணை சாட்சியம் ஞாபகத்தில் உள்ளது என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை தான் போலீசார் விசாரணையின் போதும் புகாரிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நடந்த சம்பவம் எனக்கு நேரிடையாக தெரியாது, சம்பவத்தின் போது நான் சம்பவ இடத்தில் இல்லை. ஒரு நபர் எனது தந்தை அடிப்பட்டது குறித்து எனக்கு தெரிவித்து சம்பவம் பற்றி தெரிந்து கொண்டனேன், அந்த நபர் பற்றி போலீசார் விசாரணையில் தெரிவிக்கவில்லை, அந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது.சம்பவ இடத்திற்கு ஆம்புலன்ஸ் வரவில்லை, ஆட்டோவில் தான் அழைத்து சென்றோம். நான் சொன்ன ஒரு நபர் எனது தந்தை அடிப்பட்டது கிடப்பதாக மட்டும் தான் சொன்னார் என்றால் சரிதான். யாரால் எப்படி எனது தந்தை அடிப்பட்டார் என்ற விவரத்தை சொல்லவில்லை. எதிரி ஐசக் தந்தை சிறிது மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு அருகே ஐசக்கின் தந்தை இயற்கை உபாதை கழித்தார் என்பதால் கோபப்பட்டுஎனது தந்தை அவரை அடித்து அதுகுறித்து வெள்ளவேடு காவல்நிலையத்தில் புகார் தரப்பட்டு எனது தந்தை கைது செய்யப்பட்டார் என்றால் சரிதான், எனது தந்தை கையால் தான் அடித்தார். புகார் எழுதும் போது

வழக்கறிஞரிடம் மேற்படி விவரங்கள் குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் எழுதும் போது நான் உடனிருந்து கையொப்பம் செய்தேன். போலீசார் விசாரணையில் முதல் விசாரணையில் கூறியவாறு நான் பார்க்கும் போது எனது தந்தை மயக்கநிலையில் இருந்த விவரத்தையும் அதே போல் காலில் அடிப்பட்ட விவரத்தை சைகையால் காலை காட்டி சொன்ன விவரத்தையும் நான் சொல்லியுள்ளேன். முதல் விசாரணையில் இந்த எதிரிகள் தான் எனது தந்தையை தாக்கினார்கள் என்று கூறிய விவரம் தவறானது என்று சொன்னால் சரியல்ல.

Sd/. M.A. Kabeer
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம்
திருவள்ளூர்,